**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No.228/2024**
**U/s. 294(b),324,506(2) IPC**
**PROSECUTION WITNESS NO. (LW. )**

| | |
|---|---|
| **Name** : திரு. செந்தில்குமார்**(IO)** | |
| **Father's/Husband Name :** | **Occupation :** |
| **Address :** | **Age : /2026** |

எதிரி ஆஜர்.

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திரு. பரத் , பெஞ்ச் கிளார்க் –3 செல்வி, வி. சௌந்தர்யா , தட்டச்சர்.**

**<u>C.C.No. 228/2024 20.07.2026</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 11.00 FN**

**<u>முதல் விசாரணை:</u>**

**1,** நான் தற்போது தஞ்சாவூர் நகர கிழக்கு காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்து வருகிறேன். நான் மேற்கு காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக கடந்த 01.06.2022 ம் தேதி பணியிலிருந்தபோது தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த பாலசுப்ரமணியம் என்பவரின் காய தகவலை பெற்று , அப்பால் மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த அவரிடம் நடந்த சம்பவத்திற்கு , புகார் வாக்குமூலம் பெற்று 01.06.2022 ம் தேதி 19.15 மணிக்கு அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 706/2022 சபி. 294(b), 324, 506(ii) இதசவின் படி வழக்கு பதிவு செய்தேன். **காயத்தகவல் அசாஆ 2 , புகார் அசாஆ 3 , முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

2. பின்பு வழக்கினை தனது புலன் விசாரணைக்கு எடுத்து கொண்ட நான், கடந்த 01.06.2022 ம் தேதி 20.15 மணியளவில் சம்பவயிடம் சென்று அங்குள்ள சாட்சிகள் பெத்துராஜ் மற்றும் முத்துகுமரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **பார்வை மகஜர் அ.சா.ஆ. 5 , மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 6 ஆகும்**. பின்பு மகஜர் சாட்சிகள் மற்றும் இதர பட்டியல் சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3. பின்பு எதிரியை தேடி வந்த நிலையில் தஞ்சாவூர் மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் Crlmp 2842/2022 , 09.06.2022 ல் முன்ஜாமீன் பெற்று சென்றதால் அவரை கைது செய்ய இயலவில்லை. பின்பு இவ்வழக்கில் காயம்பட்ட வாதிக்கு சிகிச்சையளித்த மருத்துவர்ளான திரு. பிரபு , திரு, தனசேகர் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். வாதி சிகிச்சை முழுமைபெறாமல் மருத்துவமனையிலிருந்து

தன்னிசையாக வெளியேறி சென்றதால் மருத்துவர் No Opinon என அளித்த **சான்று அ.சா.ஆ. 7 ஆகும்.**

4 . பின்பு இவ்வழக்கில் தனது புலன் விசாரணை முடித்து கொண்ட நான் சாட்சிகளின்வாக்குமூலங்களின் இருந்தும், தனது புலன் விசாரணையிலிருந்தும் மேற்படி எதிரி குற்ற சம்பவத்தில் ஈடுபட்டது உண்மை என தெரியவந்ததால் எதிரி மீது மேற்படி இதச பிரிவுகளின் படி 22.06.2022 ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

**1.** இவ்வழக்கில் காயம்பட்டதாக சொல்லப்படும் நாள் 29.05.2022 என்றால் சரிதான். மருத்துவமனையில் அனுமதிக்கபட்ட நாள் 30.05.2022 என்றால் சரிதான். மருத்துவமனையிலிருந்து காவல்நிலையத்திற்கு தகவல் எவ்வளவு நேரத்தில் கிடைக்கும் என்றால் 3–4 மணிநேரத்தில் வந்து விடும். சில நேரங்களில் காலதாமதம் ஏற்படும். நான் புகார் வாக்குமூலம் பெற்றது 01.06.2022 என்றால் சரிதன். கண்ணுற்ற சாட்சிகளாக சொல்லப்படும் ரெங்கராஜன் மற்றும் ரவிச்சந்திரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் விசாரணை செய்யவில்லை. உண்மையில் இதுபோல் ஒரு சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், அதனால்தான் கண்ணுற்ற சாட்சிகளாக சொல்லப்படும் ரெங்கராஜன் மற்றும் ரவிச்சந்திரனை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. வாதி கையில் காயம்பட்டதாக தான் வழக்கு என்றால் சரிதான்.

2. வாதி மருத்துவரிடம் தன்னை 6 நபர்கள் கட்டையால் தன்னை தாக்கியதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். ஆனால் எனது விசாரணையில் நந்தகோபால் ஒரு நபர் மட்டும் தன்னை தாக்கியதாகவும் , மற்ற நபர்கள் அங்கே நின்று கொண்டிருந்தார்கள் என்றும், தான் தவறுதலாக அந்த நபர்களையும் சேர்த்து கூறியதாக சொன்னார். உண்மையில் பசா 1 ற்கு 29.05.2022 காயம் ஏற்பட்டிருந்தால் அன்றே மருத்துவமனையில் அனுமதிக்கபட்டிருப்பார் என்றால் சரியல்ல. பசா2 பாலசுப்ரமணியன் சம்பவயிடத்தில் இருந்ததாக பசா1 எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

3 . நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும், சம்பவயிடத்தில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. காவல் நிலைய புள்ளிவிவர கணக்கிற்காக வீட்டிலிருந்த எதிரியை விசாரணைக்காக அழைத்து வந்து பொய்யாக வழக்கு போடப்பட்டது என்றால் சரியல்ல. உண்மையில் பசா1 காயம் ஏற்பட்டிருந்தால் அவர் மருத்துவமனையில்

அனுமதிக்கப்பட்டு முழுமையாக சிகிச்சை பெற்றிருப்பார் என்றாலும், அதனால்தான் அவர் முழுமையாக சிகிச்சை பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

ஒப்பம் – S.T. கனிமொழி,L.L.M.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.